விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-(18+8) Registered as a News paper in Sri Lanka

14 MAY 2002
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு
நியூ நகுலா ஜு வல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 30 திங்கட்கிழமை (13.05.2002) தொலைபேசி 3378 ஒலி 145

# அமெரிக்க ஆயுதக் கப்பல்களின் இலங்கை வருகை: இந்தியா உஷார்

(லண்டன்)

அமெரிக்காவின் நவீன அணு ஆயுத நாசகாரிப் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துள்ளமையை அடுத்து இந்தியக் கடற்படையினர் உஷார் அடைந்துள்ளனர்.

அமெரிக்கப் போர்க்கப்பல்கள் இலங்கை வருவதன் மூலம் இந்தியாவின் இறைமைக்குப் பங்கம் ஏற்படலாம் என்று இந்தியா கருதுவதாகவும் இதனால் இந்தியக் கடற்படையினர் இந்து சமுத்திரக் கரையோரம் மற்றும் சர்வதேசக் கடல் எல்லையில் ரோந்து நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடல் ரோந்து நடவடிக்கைகளுக்கென விஷேட கடற்படைப்பிரிவினர் அதிவேகப் படகுகள் மற்றும் கப்பல்களைப் பயன்படுத்துவதாகவும் தெரியவருகிறது.

இலங்கைக்கு அமெரிக்காவின் போர்க்கப்பல் மற்றும் அவர்களின் உளவுப்பிரிவினர் அண்மைக்காலமாக பல தடவை வந்து செல்வது தென்னாசிய சார்க் நாடுகளின் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகவும் இந்தியாவின் நடவடிக்கைகளை வேவு பார்க்கும் ஒரு திட்டம் எனவும் கருதப்படுவதாலேயே தீவிர பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ் நாட்டில் கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் கரையோரக் காவற்படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

### கொழும்பில் பஸ் விபத்து 25 பயணிகள் காயம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைக்கு அண்மையில் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்சும் தனியார் சொகுசு பஸ்வண்டியும் மோதியதில் 25பயணிகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவர்கள் அவசர சிகிச்சைப்பரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## வன்னிப் பாடசாலைகளுக்கு 78 மில்லியன் ரூபாவை ஆசிய அபி. வங்கி வழங்கியுள்ளது

அன்பு வாசகர்களே!
ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
சங்கு நாதம் + வலம்புரி
விலை ரூ. 14மட்டும்
கேட்டு வாங்குங்கள்

## 3000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

(வவுனியா நிருபர்)

**இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் நிலவும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அப் பகுதிப்பாடசாலைகளின் வளங்களை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு 78மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது.**

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நிலவும் தளபாடம், மற்றும் பாடசாலை உபகரணப் பற்றாக்குறையை போக்கி அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையையும் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் படித்து விட்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆசிரிய நியமனங்களில் வன்னிப் பகுதியைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்களுக்கும், க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

வன்னிப் பகுதியென்பதில் முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு,

(08ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி இன்று வெளியாகும்

(கொழும்பு)

2000/2002 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இன்று வெளியிடப்படுமென்று, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

வெட்டுப்புள்ளி விபரங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சற்ஸ்கோர் முறைக்கு அமைவாகவே வெளியிடப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை சற்ஸ்கோர் முறை மாணவர்களை பாதிப்புக்கு உள்ளாக்குகிறது என்று குறிப்பிட்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தமையும் அம்மனுவை நீதிமன்றம் நிராகரித்து தீர்ப்பு வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-8)

## தலைவர் பிரபாவை கைது செய்யும் முதல்வர் ஜெயாவின் கோரிக்கைக்கு பிக்குமார் சம்மேளனம் ஆதரவு

(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கைக்கு அமைய விடுதலைப் புலிகளின் தலைவர் ,வே.பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தேசிய பிக்குகள் சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

அண்மையில் பிக்குகள் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கை மிகவும் சரியானது என்றும் இந்தியாவின் பிரதமரை கொலை செய்த விடுதலைப் புலிகளின் தலைவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் இதனடிப்படையில் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதே சரியான நடவடிக்கை என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழக முதலமைச்சரின் கோரிக்கை குறித்தும் புலிகளின் தலைவரை இந்தியாவிடம் ஒப்படைப்பது சமபந்தமாகவும் பிரதமர் ரணில விக்கிரமசிங்காவுடன் பிக்குமார் சம்மேளனம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது (இ)

## பாடசாலைகளில் முகாமிட்டுள்ள படையினரை வெளியேற்றுவது குறித்து இன்று யாழில் உயர்மட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இராணுவம் முகாமிட்டிருக்கும் பாடசாலைகளின் விபரங்களை திரட்டுவதற்கும், அம் முகாம்களை அகற்றுவது தொடர்பாகவும் உயர் மட்ட மாநாடு ஒன்று யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதியில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகள், கல்வி அமைச்சின் செயலாளர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் இக் கலந்துரையாடலுக்கு யாழ் மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஐந்து பேரும், யாழ் மேலதிக அரசாங்க அதிபர்

(08ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருநது யாழ்வரும் லொறிகளை புலிகள்-படையினர் இணைந்து ஓமந்தையில் சோதனையிடுவர்

(வவுனியா)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றி வரும் லொறிகளின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு ஓமந்தை சோதனைச்சாவடியில் இராணுவமும் விடுதலைப்புலிகளும் இணைந்து ஒரே இடத்தில் வைத்து சோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை ஏற்றிவரும் லொறிகள் 4,5நாட்கள் கழித்தே

(08ம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் கொள்வனவு மோசடிகளை ஆராய இராணுவத் தளபதிகளிடம் விளக்கம் உயரதிகாரிகள் மாட்டுப்படலாம்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற இராணுவத் தளபாடக் கொள்வனவு தொடர்பாக விபரமான அறிக்கை ஒன்றினை இராணுவத்தினரிடம் இருந்து பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவத் தளபாடக் கொள்வனவு தொடர்பாக எழுந்துள்ள சந்தேகங்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவிடம் இந்த அறிக்கைகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தனது அமைச்சு உயரதிகாரிகளையும், முப்படைகளின் தளபதிகளையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இராணுவத் தளபாடக் கொள்வனவு சம்பந்தமான விரிவான அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற பின் உயர் அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விசாரணைகள் மூலம் கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவு மோசடிகள் வெளிப்படும் எனவும் நம்பப்படுகிறது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜனஐக்கியமுன்னணி சமாதானத்திற்கு எதிரானகட்சிஅல்ல!

### எதிர்க்கட்சித்தலைவர் சண்டே ரைம்ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி சமாதானத்திற்கு எதிரான கட்சி அல்ல நாமும் சமாதானத்தையே விரும்புகின்றோம் இதனை அடைய அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சில் ஈடுபட வேண்டும் என்றே விரும்புகின்றோம். என்றுஎதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜாபக்ஸ விருப்பம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து ராஜபக்ஸ சண்டேடைரம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு.

கேள்வி -

போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக கட்சிக்குள் இருவேறு கருத்துக்கள் உண்டா?

பதில் -

கட்சி சமாதானத்திற்குஎதிரானதல்ல ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு தனியரசிற்கு வழி வகுத்துவிடும் என்ற அச்சம் இருக்கிறது. பேச்சுக்கள் உடனடியாக தொடங்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு இடைக்காலநிர்வாகம் தேவையற்றது.

கேள்வி -

ஐ.தே.மு. அரசாங்கம் கொண்டுவரவுள்ள மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் சட்ட மூலம் பொ. ஐ முன்னணியை பாதிக்குமா ?

பதில் -

நான் அச் சட்டத்தை ஆதரிப்பேன். எனது தந்தையாரும் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் மனச்சாட்சிப்படி வாக்களித்ததிலிருந்தே வரலாற்றில் மாற்றம் ஏற்பட்டது. இதனாலேற்படக்கூடிய பின் விளைவுகளை பற்றி நான் அச்சமடையவில்லைஎம்மில் 20எம். பிக்கள் கட்சிமாறினாலும் நாம்தொடர்ந்தும் எதிர்க்கட்சியே ஆனால்ஐ. தே. முன்னணிபிலிருந்துஐந்து எம். பிக்கள்எதிர் கட்சிக்குவந்தால் நாம்எதிர்க் கட்சியாகஇருக்கமாட்டோம்.

கேள்வி?

அறநெறிக் கோவையொன்று கட்சிக்கு தேவைஎனக் கூறியிருந்தீர்களே அதுஅவசரமானஒன்றா?

பதில்-

ஆம் பொ.ஐ.மு.உறுப்பினர்கள் கட்சிக்கும் பொது மக்களுக்கும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகாட்ட வேண்டும் ஒருவர் வாயாடித்தனமாக பேசவும் ஏனையவர்கள் பின்பற்றவுமாகஇருப்பதனால் அறநெறிச்கோவையொன்று அவசியமே,

கேள்வி?

நீங்கள் எதிர்ப்புப்போராட்டம் ஒன்றை வியாழனன்று நடத்துகிறீர்கள் ஜே.வி.பியையும் சேர்ப்பீர்களா?

பதில்-

நாம் எமதுகட்சியின் தனித்துவத்தை பேணவேண்டும் மே16ம்திகதிஎதிர்ப்புப் போராட்டம் எம்மால் நடத்தப்படுகிறது ஆனால்வேறுகட்சிகளும் அதில் இணையமுடியும்.

கேள்வி?

பட்டிவீரக்கோன் போர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு பாராளுமன்றக்குழு வேண்டுமென்றிருக்கிறாரே

பதில்-

எமது கட்சி கண்காணிப்பில் ஒருஅம்சமாக இருக்க விரும்புகிறது ஒரு அஞ்சல்சேவகன்போலன்றி நாம்கண்காணிப்புபணிகளில் பங்குபற்றவே விரும்புகின்றோம் நாம் பங்குபற்றுவதை தமிழ் கட்சிகள் எதிர்க்கின்றார்கள் அவர்கள் புலிகளுக்கு பயப்படுகிறார்கள். (இ)

## இன்று பிரிவுபசார வைபவம்

(யாழ்ப்பாணம்)

வலயம் - 04ஐ சேர்ந்த வடக்கு - கிழக்கு பிராந்திய பணிப்பாளர் கே. ஆறுமுகத்திற்கு பிரிவுபசார வைபவம் இன்று 13ம் திகதி முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி நூலககேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள் மற்றும் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் நா. யோகராஜன் உட்பட பலரும் கலந்துகொள்வர். பிரிவுபசார வைபவத்தை தொடர்ந்து கருத்தரங்கும் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-19-06)

### வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

## அரைஇறுதி ஆட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

வடக்குகிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடாத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரைஇறுதி ஆட்டம் மற்றும் இறுதிஆட்டம் நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஏற்கனவே இடம்பெற்ற போட்டிகளில் அரைஇறுதி ஆட்டமாக முதலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும், யாழ்பிரதேச செயலக அணியும் மோதின இப்போட்டியில் யாழ்பிரதேச செயலகஅணியினை 37:25 என்ற வீதத்தில் சண்டிலிப்பாய் பிரதேச அணி வென்றது.

அடுத்து அரைஇறுதி ஆட்டமாக நல்லூர்பிரதேசசெயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலகஅணியும் மோதின இப்போட்டியில் நல்லூர் பிரதேச அணியினை 34;23 என்றவீதத்தில் பருத்தித்துறை அணிவென்றது.

இறுதிஆட்டமாக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக அணியும் பருத்தித்துறை பிரதேசசெயலகஅணியும் மோதின இப்போட்டியில் பருத்தித்துறை பிரதேசசெயல அணியினை 48:46என்ற வீதத்தில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகஅணிதோற்கடித்தது (க-2)

### தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த

# எம். பிக்களை பதவி விலகுமாறு விடுதலைப்புலிகள் வற்புறுத்தவில்லை

### தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை இராஜநாமசெய்யுமாறு தமிழீழவிடுதலைப்புலிகள் வற்புறுத்தியதாக வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது விடுதலைப்புலிகள் இதுவரையில் எந்தவித அழுத்தமும் விதிக்கவில்லை.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடுவப்பணியகத்தில் சுமுகமானமுறையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களை உடனடியாகவிடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றுமே விடுதலைப்புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார், (க-9)

# கூட்டுறவுத்துறையை நசுக்க சில வர்த்தகர்கள் திட்டம்

### சி. வி. கே. சிவஞானம் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள ஒருசில தனியார் வர்த்தக துறையினர் திட்டமிட்டு கூட்டுறவுத்துறையை நசுக்குவதற்த வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் திட்டமிட்ட இந்தசெயற்பாட்டிற்கு முடிவு காணப்படாவிட்டால் கூட்டுறவுத் துறை பாரிய பாதிப்புக்கு உள்ளாகும் என்று கூட்டுறவாளர் சி.வி. கே. சிவஞானம் எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கூட்டுறவாளர்களுடனான கலந்துரையாடலிலேயே இந்த எச்சரிக்கையை சி.வி.கே.சிவஞானம் விடுத்துள்ளார்

யாழ்மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ, கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோககுக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் , இயக்குநர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்

மக்கள் அமைப்பான கூட்டுறவுத்துறையில் நேரடியாகவும், மறைமுகமாகவும்சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் இணைந்துள்ளன. இவர்கள் கூட்டுறவுத் துறையை நம்பியே வாழ்க்கை நடத்துகிறார்கள் ஒருசில தனியார்துறை வர்த்தகர்களின் திட்டமிட்ட சதிகளினால் கூட்டுறவுத் துறை நசுக்கப்படுமானால் இவர்களது வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் என்று கூறினார்.

இக் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்து கொண்டார்(ம)

## இராசி பலன்

13-05-2002

(சித்திரை 30 திங்கள்)

பிரதமை பி. ப. 5-38 வரை

கார்த்திகை பி. ப 4-19 வரை

இராகுகாலம் 7-24 - 8-54

சுபநேரம் 11-54 - 1-24

**மேடம்**

வாக்குக்கலகம், காரியதாமதம், பொருள் விரயம், செல்வாக்குக் குறைவு

**இடபம்**

காரிய அனுகூலம், பெரியோர் ஆதரவு, புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி

**மிதுனம்**

பிதா சிந்தை, தொழில் கஷ்டம், காரிய அலைச்சல், நித்திரை குழப்பம்

**கடகம்**

தனலாபம், உறவினர் சந்திப்பு. குடும்பசுகம், தொழில் நன்மை

**சிங்கம்**

அதிகாரம், தூரதேசசெய்தி செய்தொழில் மேன்மை, காரிய அனுகூலம்

**கன்னி**

ஆன்றோர் மதிப்பு, மனச் சஞ்சலம், வேலைப் பளு, முயற்சி தாமதம்

**துலாம்**

காரியத்தடங்கல், நண்பர்கள் வெறுப்பு, நல்ல உணவு கிடைத்தல், உடல் சோர்வு

**விருச்சிகம்**

பிரயாண சுகம், நண்பர்கள் உதவி, சுவாரஸ்யம், காரிய சித்தி

**தனுசு**

காரிய நன்மை தொழில் விருத்தி குடும்பமகிழ்ச்சி லட்சுமி கரம்.

**மகரம்**

தாழ்ந்த சுபாவம், வியாபார சிறப்பு, காரியதாமதம். புத்திரரால் கவலை.

**கும்பம்**

அற்பர் உறவு. உடல்நலக் குறைவு முயற்சி தாமதம், பயந்த சுபாவம்.

**மீனம்**

இனிய சம்பவம் புதிய பொருள் சேர்க்கை சகோதரர் உதவி, காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## ஆசிரியர்கள் பற்றாக்குறை

மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகளில் சுமார் 1600 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக மத்திய மாகாண கல்வி அமைச்சர் வே. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக நிகழ்வதாகவும் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி முடித்து வெளியேறியவர்களிற்கு நியமனம் வழங்கப்படாமல் உள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

### உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள்

## ஒப்பந்த வேலையில் ஈடுபடுவதற்குத் தடை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு அந்தந்த மன்றங்களின் அதிகாரங்களுக்கு உட்பட்டபகுதிகளில் எந்தவொருஒப்பந்த வேலைகளிலும் ஈடுபட அனுமதிவழங்கப்பட மாட்டாதுஎன உள்நாட்டுஅலுவல்கள் மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சி நிர்வாக அமைச்சர் அலிக் அலிவிகார தெரிவித்துள்ளார்

இந்தத் தீர்மானத்தை மீறிச்செயற்படுபவர் தமது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் எனவும்,

உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிப்போர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்(இ 5)

### இந்தியாவில் 96 ஆண்டுகளின் பின்னர்ஏற்பட்ட

## கடும் வெப்பத்தினால் 23 பேர் துடிதுடித்துப் பலி

(புதுடில்லி)

இந்தியாவில் கடுமையான வெப்பம் காரணமாக இதுவரை 23 பேர்பரிதாபகரமாக பலியாகியுள்ளனர், நூற்றுக் கணக்கானோர் வெப்பம் மற்றும் தொற்று நோய் காரணமாக பாதிப்படைந்து வருகின்றனர்.

கிழக்கு கோதாவரி மாவட்டம் இராஜமந்திரியில் சுமார் 96 ஆண்டுகளின பின்னர் மிகவும் அதிகளவான வெப்பம் பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில மாவட்டங்களில் மழை வேண்டியும் வெப்பம் தணியும்படியும் பிரார்த்தனைகள் இடம் பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன் யாழ்ப்பாணம்.

# கைதடி மத்தியமருந்தகத்தில் கடந்த நான்கு மாதத்துள் 5 ஆயிரம் பேர் சிகிச்சை

(தென்மராட்சி)

கைதடி மத்திய மருந்தகத்தில் இவ் வருடம் ஜனவரி முதல் ஏப்பிரல் வரையான நான்கு மாதங்களில் 4 ஆயிரத்து 569 பேர்வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வருடம் ஜனவரியில் ஆயிரத்து 145 பேரும், பெப்ரவரியில் ஆயிரத்து 251 பேரும் மார்ச்சில் ஆயிரத்து 124 பேரும் ஏப்பிரலில் ஆயிரத்து 49 பேரும் சிகிச்சை பெற்றனர்.

தென்மராட்சி யுத்தத்தினைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த இம் மருந்தகம் இவ் வருடம் ஜனவரி முதல் அதன் பழைய இடத்திலேயே மீண்டும் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-77)

# அரசு- புலிகள் பேச்சு நிகழ்ச்சி திட்டம் இல்லை

## ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என ஜனாதிபதியின் ஊடகங்களுக்கான ஆலோசகர் ஹரேன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் இருந்துவரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறித்தும், தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகள் குறித்தும் ஜனாதிபதி சந்தேகம் கொள்வதற்கு இதுவே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-08)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குக

## வலி- கிழ. பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக கல்வி கற்பித்தும்கூட இது வரையில் நியமனம் வழங்கப்படாத 30 இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் வலி-கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ளனர். இவர்களுக்கு உரிய நியமனம் வழங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மேலதிக மாகாண கல்விப்பணிமனை முன்பாக இடம்பெற்று வரும் தொண்டர் ஆசிரியர்களின் மறியல் போர் தொடர்பாக வலி. கிழக்கு பிரதேச சபை வெளியிட்ட அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் கடந்த 09 ம் திகதி வலி. கிழக்கு பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொண்டர் ஆசிரியர் மற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக சில தீர்மானங்கள் இன்று மேற்கொள்ளப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# உள்துறை அமைச்சரின் அவசர கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும் என உள்துறைவிவகாரங்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் பலரும் பல்வேறு குற்றச் சாட்டுகள் தொடர்பாக கைது செய்யப்பட்டும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டும் வருவதனையடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

சுமார் 6ஆயிரத்து 600பேர் கடமையாற்றிவரும் இப் பிரிவில் இருபது குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டுஇரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க-08)

# பிரதேச செயலர்களுக்கு அதிக வெற்றிடம்

(கொழும்பு)

நாடு முழுவதும் பிரதேச செயலர்கள் மற்றும் உதவிச் செயலாளர்களுக்கு அதிக வெற்றிடம் நிலவுவதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஏ. குணசேகர தெரிவித்துள்ளார்.

28 பிரதேச செயலர்களுக்கும், 42 உதவிச் செயலாளர்களுக்குமே வெற்றிடம் உள்ளதாகவும், விரைவில் இவ்வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைமேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களின் சேவையை பெற்றுக் கொள்வது சற்றுச் சிரமமாக உள்ளது என்றும், எனினும் இப்பதவிக்கும் ஆட்களை நியமனம் செய்யும் நடவடிக்கை எவ்விதத்திலும் தாமதமடையாது என்றும் தெரிவித்தார். (க-09)

# வீட்டு உரிமையாளருக்கு படையினர் வாடகைப்பணம்

(அரியாலை)

அரியாலைப் பகுதிகளில் இராணுவத்தினர் தாம் தங்கியிருந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு வாடகைப் பணம் வழங்கி வருகின்றனர்.

1995முதல் 2000 ஆண்டு காலப்பகுதிக்கான வாடகை வீட்டின் மதிப்புக்கு அமைய இப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

புங்கங்குளம் பகுதியில் உள்ள வீட்டுரிமையாளர் ஒருவருக்கு ரூபா 65 ஆயிரம் வீட்டு வாடகைப் பணமாக காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-?)

# கோப்பாயில் பயிற்சி வகுப்புகள்

(கோப்பாய்)

பயிர்களுக்கு மருந்துதெளித்தல் மற்றும் வீட்டுத்தோட்ட பராமரிப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக கோப்பாய் மத்தி விவசாயிகள் சம்மேளன செயலாளர் ஆ. ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் வெள்ளெருவப் பிள்ளையார் பாலர் பாடசாலை மண்டபத்தில் அன்று பிற்பகல் 2.00 மணியளவில் இவ்வகுப்புகள் இடம்பெற உள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (க-74)

# அன்னாசி விலை சரிவு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து பெருமளவு அன்னாசிப்பழங்கள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அன்னாசிப்பழங்களின் விலை வெகுவாகக் குறைந்துள்ளது.

50 முதல் 60 ரூபாவரையில் முன்னர் விற்கப்பட்ட இப் பழங்கள் தற்போது 25 முதல் 40 ரூபா வரையில் விற்கப்படுகிறது. (க-225)

# ஏழாலையில் மணிமண்டபம் திறப்புவிழா

ஆத்ம சோதி நா.முத்தையாவின் நினைவாக ஏழாலையில் நிறுவப்பட்டிருக்கும்மணிமண்டபத்தின் திறப்பு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது. (க-225)

# பிரதேச செயலகம் பழைய இடத்தில்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகம் நாளை மறுதினம் புதன் கிழமை முதல் மருதங்கேணியில் முன்னர் இயங்கிய இடத்தில் இயங்கவுள்ளது. உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை தலைமையில் மு.ப 10.00 மணிக்கு திறப்பு விழா நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரசஅதிபர் க.சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (க-42)

# வல்வையில் வீடியோ படக்காட்சி

(உடுப்பிட்டி)

களமாடிச் சாதனைபடைத்த விடுதலைப்புலிப் போராளிகளின் வீடியோப்படக்காட்சி வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 7.30மணியளவில் இடம் பெற்றது.

விடுதலைப்புலிகள் பிரமுகரின் உரையும் அன்றையதினம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-254)

# சமாதான குழுவினர் இன்று புறப்படுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்து மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த சமாதானக் குழுவினர் இன்று யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு புறப்படுகின்றனர்.

வண.பிதா அன்ரனி சிசில் தலைமையின் கீழ் கடந்த10ம் திகதி வந்த இக் குழுவினர் வலிகாமம் குருநகர், நாவாந்துறை, தீவுப்பகுதி, இளவாலை ஆகிய பகுதிகளுக்குச்சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தனர். (க-?)

சாவகச்சேரியில்

# 20 வர்த்தக நிலையங்களே செயற்படுகின்றன

## வர்த்தகர்கள் கவலை

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரில் முன்பு இயங்கிய வர்த்தக நிறுவனங்களை மீளவும்அங்கு ஆரம்பிப்பதற்கு முடியாத நிலை காணப்படுவதாக வர்த்தகர்கள் சார்பில் கூறப்பட்டுள்ளது.

அங்கு மொத்தமாக விருந்த 420 வர்த்தக நிறுவனங்களில் தற்போது 20க்கும்குறைவான வர்த்தக நிறுவனங்களே தமது வர்த்தக நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பித்துள்ளன.

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட தமது வர்த்தகக் கட்டடங்களை புனரமைப்புச் செய்வதற்கும் வர்த்தக நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் பெரும் நிதித்தேவை உள்ளதால் அதனை தம்மால் இப்போது ஈடு செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் தமதுமுயற்சிகளுக்குநிதியுதவி வழங்கக்கூடிய வகையில் எந்தவொரு அமைப்பும் இது வரை முன்வராமையே தமது பின்னடிப்புக்கான அடிப்படைக்காரணமாகும் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான சுமார் 175 வர்த்தக நிலையங்களின் சேதமடைந்த கட்டடங்களைப் புனரமைப்புச் செய்து தருவதற்கு சாவகச்சேரி நகர சபை இது வரை எவ்வித ஆயத்தமும் செய்யாமால் இருப்பது பற்றியும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே சமயம், வர்த்தகத்தினை நம்பியிருந்த சுமார் 400 குடும்பங்களும் இப்போது எத்தகைய வருமானமும்அற்ற நிலையில் இருந்து வருகின்றன. அத்துடன் இவற்றிற்கும் அரசின் நிவாரண உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்வாறிருக்க சாவகச்சேரி நகர வர்த்தகர்களின் நிலைப்பாடுகள் தொடர்பாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் பிரதம மந்திரி, அமைச்சர்கள் மற்றும் ராஜதந்திரிகளுக்கு பல கோரிக்கைகள் விடுத்திருந்த போதிலும் இது வரை எந்தவித உதவியும் கிடைக்கவில்லை என வணிகர் மன்ற வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது. (க-77)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காய்வு சேவையில்கணக்காய்வு அத்தியட்சகர் வகுப்பு II தரம் II பதவிக்குஇம்மாத 3ஆம் திகதி வர்த்தமானியில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஜூன் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னராக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சை திணைக்களம், பலவத்த, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-03)

# பாடசாலை அனுமதிக்கு வதிவிடப் பத்திரம் அவசியமற்றதாகும்

## அமைச்சர் கொடித்துவக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபல தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்க வதிவிட அத்தாட்சிகளை சமர்ப்பிக்க தேவையில்லையென கல்வி கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சர்கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வதிவிடங்களை உறுதி செய்ய வேண்டியுள்ளதால் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்க விரும்பும் பெற்றோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர் இதனை கருத்திற் கொண்டே இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இனிவருங் காலங்களில் முன்னைய நிலைமைபோல் 6 வருடவதிவிட அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க தேவையில்லையெனவும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். (க-9)

# யாழ். மாநகரசபையில் இன்று கலந்துரையாடல்

## பொலிஸ் அதிகாரியும் பங்கு பற்றுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர முதல்வருக்கும், யாழ். பொலிஸ் உயர் அதிகாரிக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இன்று மாநகர முதல்வரின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகும் இச்சந்திப்பில் யாழ். நகரப் பகுதியில் இடம்பெறும் நடைபாதை வியாபாரம் மற்றும் பாத சாரிகள் எதிர் நோக்கும் அவல நிலைமைகள் குறித்தும் இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-19-06)

கொழும்பில் படிவங்கள் விநியோகம்

# பொது மக்கள் எவரும் பயப்படத்தேவையில்லை

## பொலிஸ் அதிகாரி விளக்கம்

(கொழும்பு)

கொழும்பில் தற்போது பொலிஸாரினால் விநியோகிக்கப்பட்டு வரும் படிவங்கள் சம்பந்தமாக தமிழ் மக்கள் கலவரப்படத் தேவையில்லையென பொலிஸ் உயர்மட்ட அதிகாரியொருவர்தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொது மக்களின் நலன் கருதி தமிழ் பேசும் மக்களுக்கும்சிங்கள மக்களுக்கும் மேல் மாகாணத்தில் இப்படிவம் விநியோகிக்கப்படுகிறது பொலிஸ் பொது மக்களுக்கிடையிலான நல்லுறவுகளை வளர்க்கும் வகையிலேயே இப்படிவம் விநியோகிக்கப்படுவதாகவும்அவர் தெரிவித்துள்ளார். (க-09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான...

கள் தாம் விரைவில் கேடு அடைகின்றன. திறமையான நல்ல சுபாவங்களை உடையவர்கள் தாம் சரியான பயிற்சி பெறாத போது மிகவும் கெடுதலானவர்களாக மாறுகிறார்கள், தெரிந்தே பித்தலாட்டத்தை விரும்புபவனை நம்பக் கூடாது, தெரியாமலே பித்தலாட்டத்தை விரும்புபவன் முட்டாள், நம்பகமற்ற கபடக்காரனுக்கும், முட்டாளுக்கும் நண்பர்கள் இந்த உலகில் அநாதைகள் போல் தனிமை உணர்ச்சியைத் தான் காண்பார்கள்,

பொய்யை மருந்து போல் உபயோகிக் லாம், ஆனால் மருந்தை உபயோகிக்கத் தெரிந்தவன் தான் உபயோகப்படுத்தலாமே தவிர, எல்லோரும் அதை உபயோகிக்கக் கூடாது, புளுகுகள் சில சமயங்களில், உபயோகப்படுவதுண்டு, முக்கியமாகப் பகைவர்களின் விஷயத்தில் பொய்யை உபயோகிக்கலாம் மனிதன் அளவு மீறிய சிரிப்பையோ அளவுமீறிய கண்ணீரையோ தவிர்க்கவேண்டும், அண்டை அயலாரையும் அவ்வாறே செய்யும்படி தூண்டவேண்டும், எந்தநிலையிலும் மிதமாக இருப்பதே ஆனந்தத்திற்கும் வெற்றிக்கும் வழி, பொறுமையற்று நிதானம் தவறிஉணர்ச்சிவசப்பட்டு நடப்பதினால் நமக்கு ஒரு லாபமும் ஏற்படாது. தத்துவம் என்பது அதி உன்னதமான சங்கீதம்.

தன்னடக்கம் அவசியம்

பொதுமக்கள் உண்பது, குடிப்பது ஆண், பெண் காதலில் ஈடுபடுவது முதலிய விஷயங்களில் உண்டாகிற சகலவிதமான சுகங்களிலும் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும், அதாவது எந்தச்சுகத்தையும், மிதமிஞ்சி அநுபவிக்கக் கூடாது, எல்லாவற்றிலும்ஒரு நிதானம் இருக்க வேண்டும், ஆசைகளும் அதிகரிக்கஅதிகரிக்கதேவைகளும்அதிகரிக்கும் அவைகளைத்திருப்தி செய்ய முடியாமல்தவிப்பான். அவனுடையஉள்ளத்தை சோதித்துப் பார்த்தால்? அவன்தான உண்மையில்பெரியவறிஞன்என்பது தெரியும் அநாவசியமான இச்சைகளின் இன்பங்களால் பணச் செலவும், சகல விரயமும் ஏற்படுகிறது, அவசியமானஇன்பங்களினால் இரண்டும்மிஞ்சுகிறது. ஆண், பெண் இன்பமமுதலானசகலஇன்பங்களிலும இப்படித்தான்.

எவரிடம் அழகான ஆத்மாவும், அழகான தேகமும் ஒன்று போல் அமைந்திருக்கிறதோ அவரைக் காண்பதை விடக் கருத்துக்கும் கண்ணுக்கும் இனியகாட்சிவேறெதுவும் இல்லை நல்லவனோ கெட்டவனோ எந்த மனிதனின் அந்தரங்கத்திலும் அடக்க முடியாத சிலமிருகத்தனமான இச்சைகள் இருக்கின்றன. அவை மனிதன் உறங்கும் போதுகனவுகளாக வெளிப்படுகின்றன வியப்புத்தான் தத்துவ ஞானியின் அளவு மிகுந்த கவாச்சி. தத்துவஞானத்தின் துவக்கம் இதைத்தவிர வேறெதுவுமில்லை, ஞானத்திற்கு அருகதையற்றவர்கள் ஞானிகளைப் போல் வேடம் போடுவதனால் தான் பொதுமக்களுக்கு ஞானிகள் மீதே துவேஷம் ஏற்படுகிறது.

மரண பயம்

எதையும் செய்யக்கூடிய மனிதன் சாகவோ வாழவோ உள்ள சந்தர்ப்பங்களைக் பற்றிக் கணித்துப்பார்க்கக் கூடாது. எதைச் செய்யும் போதும் நல்லது செய்கிறோமோ கெடுதல் செய்கிறோமோ என்பதை மட்டும் தான் கருதிப்பார்க்கவேண்டும். நமது இளைஞர்கள் துணிச்சல் சுபாவமுடையவர்களாய் இருக்க வேண்டுமானால், அவர்களுக்கு மரண பயம் இருக்கக் கூடாது. அத்தகைய தைரியம் தரக்கூடிய கதைகளைச் சிறுவயதிலிருந்தே அவர்களுக்குச் சொல்லி வரவேண்டும்.

மனிதன் தன் உடம்பில் நோய் இருக்குமோ என சதா கற்பனை செய்கிறான். தேகாரோக்கியத்துக்குத் தேவையான அளவு அக்கறை செலுத்த வேண்டுமே தவிர, அதற்கு அதிகமாகத் தேகத்தின் மீது கவனம் செலுத்துவது ஈனமாகும். பிறரின் நையாண்டிகளையும். கோமாளிக் கூத்துகளையும் கண்டு முதலில் ஆனந்தமடைகிற நாம், கடைசியில் நாமே நையாண்டி செய்யப்படுகிறவர்களாயும் கோமாளிகளாகவும் ஆகிவிடுகிறோம். அதி உன்னதமான சிருஷ்டி அதி உன்னதமான அழகைத் தவிர வேறெதுவும் இருக்க முடியாது. தூய்மையான காற்றோட்ட முள்ள இடத்தில் வசிப்பவன் தன்னையறியாமல் தேகாரோக்கியம் பெறுவது போல அழகான கலைகளின் மத்தியில் வளர்கிறவன் உயர்ந்த மனோபாவங்களைப் பெறுகிறான். சிரமமானது சாவைத்தவிர்ப்பதல்ல அதர்மத்தைத்தவிர்ப்பது தான்.

## சலன சித்திர கருத்தரங்கு

'நிரந்தர சமாதானத்தை அடைய என்ன செய்ய வேண்டும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றை சலன சித்திரம் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கருத்தரங்கிற்கு சகல பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், நலன் விரும்பிகள் உட்பட சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன சுதந்திரத்தையும், இலங்கையின் சுதந்திரத்தையும் விரும்பும் அனைத்து சக்திகளும் உடனடியாக ஓரணி சேர்ந்து பேரெழுச்சி பெற வேண்டும் என்றும் அவ் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-03)

## வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை

# கருத்துக்கணிப்பு அவசியம் தேவை

### அமைச்சர் லொக்குபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால சபையொன்று அமைப்பதாயின் அங்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என நீதி, சட்ட சீரமைப்பு, இன ஒருமைப்பாட்டு, புத்த சாசன அமைச்சர் வி.ஜ.மு. லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை எதிர்த்து வருகின்றார். எனவே அவர் தலைமையிலான அரசு நாட்டை இரண்டாகப் பிரிக்க ஒருபோதும் அனுமதிக்காது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டில் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக பாடுபட்டுவரும் அதே நேரம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வண்ணம் சமாதான பாதையை முன்னெடுத்துச் செல்பவர் பிரதமர் ஒருவரே எனவும் தெரிவித்துள்ளார். (க-08)

## தாண்டிக்குளம்- ஓமந்தை சோதனை சாவடிக்கு சுதந்திரமாக செல்லலாம்

(வவுனியா)

தாண்டிக்குளத்துக்கும்-ஓமந்தைக்குமிடையிலான வாகன தொடரணி முறைநீக்கப்பட்டு சுதந்திரமாக சோதனைச் சாவடிக்கு செல்லும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விடயம் சம்பந்தமாக வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் அரசியல் பொறுப்பாளர் மேலவன், வன்னி பிராந்திய பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்தினாவிடம் அண்மையில் நடை பெற்ற சந்திப்பின் போது வலியுறுத்தியதை அடுத்தே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னர், ஓமந்தைக்கும் தாண்டிக்குளத்துக்குமிடையில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் வாகனப் போக்குவரத்து நடை பெற்று வந்தது.

இதனை அடுத்து தாண்டிக்குளம் நுழைவாயிலில் மக்கள், தொடரணியில் இடம் பிடிப்பதற்காக தங்க ஆரம்பிப்பதால் அப்பிரதேசம் பல சுகாதார சீர்கேடுகளை எதிர் நோக்கியதாக அப்பிரதேசமக்கள் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-09)

## பாடசாலை செல்வதற்கு போதிய பஸ்சேவை இல்லை மாணவர் பெரும் அவதி

(தென்மராட்சி)

வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் தங்கியிருக்கும் தென்மராட்சி பிரதேச பாடசாலை மாணவர்கள் சாவகச்சேரியில் இயங்க ஆரம்பித்துள்ள பாடசாலைகளுக்கு செல்வதற்கும் திரும்புவதற்கும் போதிய பஸ் சேவை இல்லாமையினால் பெரும் பிரயாணக் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக இம் மாணவர்கள் மற்றும்ஆசிரியர்கள் பாடசாலை நேரத்துக்கு செல்லமுடியாத இக்கட்டான நிலையில் இருந்து வருகின்றனர். அதன் நிமித்தம் இப் பிரதேசங்களில் இருந்து சாவகச்சேரிடிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரிபோன்ற பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்கள் தமது பாடங்களை முழுமையாகப் பயில முடியாதநிலை காணப்படுகின்றது.

இதேவேளை சாவகச்சேரி நகரப்பகுதியை உள்ளடக்கிய இடங்களில் இருந்த வீடுகள் பல பலத்த சேதங்களுக்குஉள்ளாகியிருப்பதால் மாணவர்களின் பெற்றோர்கள் அங்கு வந்து மீளக்குடியமரமுடியாத நிலையும் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதுஇவ்விதமிருக்க, சாவகச்சேரியில் பாடசாலைகள் மீளவும் இயங்கி வருவதால் வடமராட்சி, வலிகாமம்பிரதேசங்களில் இருந்து வரும்மாணவர்களின் வசதி கருதிபாடசாலை பஸ் சேவைகளை நடத்தும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் பாடசாலைகளின் அபிவிருத்திச்சபைகளும் தென்மராட்சி பொது நல அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

அதேசமயம், தென்மராட்சி பிரதேச சிற்றூர்தி சங்கமும் இம் மாணவர்களின் வசதி கருதி பாடசாலை சேவைகளைநடத்துவதுபற்றி ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது. (க-77)

### இடம் பெயர்ந்தோர் விபரங்கள்

## கிராம அலுவலர் பிரிவாக திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயமும் இணைந்து தொடரும் யுத்தத்தால் இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ள மக்களின் விபரங்களை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பதிவு செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஜீ. சி. ஈ உயர்தரம் கற்ற மாணவர்களைக் கொண்டு முகாம்களிலும் உறவினர்கள் இல்லங்களிலும் தங்கியுள்ள மக்களின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை பதிவினை மேற்கொள்ளாத இடம் பெயர்ந்த மக்கள் தாம் தங்கியுள்ள கிராம சேவையாளரிடம்உரிய படிவத்தைப் பெற்று பதிவு செய்து உடனடியாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட இப்படிவத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களின் விபரங்கள் உட்பட பல்வேறு விபரங்களும் கேட்கப்பட்டுள்ளன. (க-232)

## அந்நிய நாடு சென்றாலும் சொந்த மண்ணை மறவாத இலண்டன் நலன்புரியினர்

(யாழ்ப்பாணம்)

இலண்டனில் செயற்பட்டு வரும் நீர்வேலி நலன்புரிச் சங்கத்தினர் தம் கிராமத்தின்அபிவிருத்தி கருதி பல்வேறுசெயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நூலக அபிவிருத்திக்கென 66 ஆயிரத்து 500 ரூபா அன்பளிப்பு செய்யப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

அதன் ஓர் நடவடிக்கையாக சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் அண்மையில் அவ் அமைப்பு உறுப்பினருள்ஒருவரானசெ. சுபேஸ் குமாரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கல்லூரி அதிபர்குணநாதன் கிராம அலுவலர் சு. சண்முகவடிவேல் உட்படபிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும் நீர்வேலி தெற்கு குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு 31 ஆயிரத்து 843 ரூபா செலவில் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு இன்னும் சில தினங்களில் வைபவ ரீதியாக செயற்பாடு ஆரம்பிக்கப்பட உள்ளது.

நீர்வேலி ஸ்ரீ கணேசா குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு 37 ஆயிரம் ரூபா பெறுமதியான மேசைகள், கதிரைகள், ஆசிரியர் மேசை, கரும்பலகை என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதுவிடயம் தொடர்பாக மேலும் அபிவிருத்தியை முன்னெடுக்கும்முகமாகவும், நடைபெற்ற வேலைகளைமேற்பார்வையிடும் முகமாகவும்சுபேஸ் குமார் இலண்டனிலிருந்துநீர்வேலி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சங்கத்திற்கு 20 ஆயிரம்ரூபா பெறுமதியான புத்தகங்களையும் இவர் அன்பளிப்புச் செய்துள்ளார்.

அந்நிய நாடுகளிற்கு பறந்தோடிய நம்மவர் சொந்த மண்ணை மறந்து அந்நிய மோகத்தில் சிக்கிச் சீரழியும் இவ்வேளையிலும் சொந்த மண்ணை மறக்காது சேவையாற்றிவரும் இலண்டனில் உள்ள நீர்வேலி நலன்புரிச்சங்கத்தினரின் சேவைக்கு கல்வியாளர், பொது அமைப்பினர் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (க-[illegible])

## ரணில் இந்திய விஜயம் அடுத்த மாதம் 08 இல்

### நெருங்கிய வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மீண்டும் அடுத்தமாதம் 8 ஆம் திகதி இந்தியா பயணமாகவுள்ளார்.

அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் மேற்கண்ட தகவலை வெளியிட்டன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பரஸ்பர உறவுகளை ஏற்படுத்தும் நோக்குடனும், அரசினாலும் விடுதலைப்புலிகளின் தலைவர்பிரபாகரனினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் குறித்து விரிவாக ஆராய்வதே இவ்விஜயத்தின் நோக்கமாகும் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை 11 ஆம் திகதியளவில் சந்திக்க இருக்கும் இவர்,

இலங்கையில்வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரம் உட்பட நாட்டினை அபிவிருத்தி செய்யக்கூடிய பல்வேறு விடயங்கள் குறித்தும் பிரதமர் வாஜ்பாயுடன் கலந்துரையாடுவார்.

தமிழ் நாட்டின் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி என்போரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கடந்த மாதமும் இந்தியாவுக்கான விஜயமொன்றை இவர் மேற்கொண்டமைஇங்கு குறிப்பிடத்தக்கது (க-8)

## விபத்தில் காயம்

வீதியின் குறுக்காகச்சென்ற நாயின் மீது மோட்டார் சைக்கிள்மோதியதால், மோட்டார்சைக்கிளில் பயணித்தவர் கீழே விழுந்ததில் காயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கச்சேரி நல்லூர் வீதியில் அண்மையில் இடம்பெற்றது. (க-225)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# நாட்டுப்புறவிழாப்பாடல்கள்

நாட்டுப்புற பாடல்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். தெய்வத் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் பாடப் பெறும் பாடல்கள் முதல் வகை என்றும், குடும்பத் தொடர்புடையநிகழ்ச்சிகளில் பாடப்பெறும் பாடல்கள் இரண்டாம் வகை என்றும் கொள்ளலாம். சிற்றூர்களில் இறைவனுக்கு விழா எடுத்துக் கொண்டாடும் நாளில் பெண்கள் கும்மி, கோலாட்டம் ஆகியவற்றையும் ஆண்கள் ஒயில் கும்மி, கதைப் பாட்டு, கூத்துப் பாட்டு, தர்க்கப் பாட்டு போன்றவற்றையும் நிகழ்த்துவர்.

கதைப் பாடல்கள் மக்கள் கூடுமிடங்களில் பரம்பரை பரம்பரையாகப் பாடல்கள் பாடி அதன் மூலம் வாழ்வு நடத்தும் சிலர் தாங்கள் பாடும் பாடல்களில் கற்பனை கலந்த சிலபாடல்களைப் பாடுவது உண்டு. புதிய படைப்புப் போல் காணப்படும் இவ்வகை பாடல்கள் நிறைந்த அளவில் காணப்படா விட்டாலும் குறைந்த அளவில் உள்ளன. புதியன படைக்கும் எண்ணம் நாட்டுப்புற மக்களிடமும் இருந்திருக்கின்றது என்பதனை நாம் இதனால் அறிகின்றோம். இத்தகைய பாடல்களில் வீரம், புராணம் கலந்து வரும். இவ்வகையில் அமைந்த பாடல்கள் சேவல் பாட்டு, வாக்குவாதங்கள், காமன் பண்டிகைப் பாட்டு, நவராத்திரி ஓடம் முதலியவையாகும். இப்பாடல்கள் நீண்ட பாடல்களாக அமையும்.

மக்கள் தங்கள் இல்லங்களில் நிகழ்த்தும் திருமணங்கள், விழாக்கள், சடங்குகள் முதலியவற்றில் பலருடன் கலந்து மகிழ்ந்து பாடல்களைப் பாடி இந்நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவர். இவ்வகைப் பாடல்கள் பொங்கல், வருடப்பிறப்பு, ஸ்ரீ ஜெயந்தி, கலைமகள் விழா, வளைகாப்பு விழாக் காலங்களில் வருவன.

மு.கடம்பநாதன் எம்.ஏ.இசை

## கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில்

# தனக்கென தனியிடத்தை வகிக்கும் நீர்வேலி சீ. சீ. த. க. பாடசாலை

## உதவிக் கல்விப்பணிப்பாளர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் நீர்வேலி சீ.சீ. தமிழ்க் கலவன் ஒரு தனித்துவமான இடத்தை வகிக்கிறது.

நீர்வேலி சீ.சீ. தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் இ. இராஜசேகரம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இப்பாடசாலை சிறந்த முறையில் செயல்பட்டு வருவதை உணரக்கூடியதாக உள்ளது. அதிபர், ஆசிரியர்களின் புரிந்துணர்வுடன் கூடிய செயற்பாடு பாராட்டிற்குரியது.

கோட்ட ரீதியில் அல்லது வலய ரீதியில் இடம்பெறும் எந்தப் போட்டியிலும் இப் பாடசாலை மாணவர் தமக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்வது போற்றுதற்குரியது.

இப்பாடசாலை பல்வேறு வகையில் சிறப்புற்றாலும் கூட இங்குள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு அனுப்பி வருவது வேதனைக்குரியது என்றார்.

நீர்வேலி செல்லக்கதிர்காம பிரதம குரு கு. தியாகராசக் குருக்களின் (நீர்வைமணி) ஆசியுரையைத் தொடர்ந்து, இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் கோப்பாய் கல்விக் கோட்ட உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (க)

## வெளிநாட்டுக்கடனில்

# தொடர்ந்து தங்கியிருத்தல் சாத்தியமான ஒன்றல்ல

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்காக வெளிநாட்டுக் கடனில் தொடர்ந்து தங்கியிருத்தல் சாத்தியமல்ல என்று மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவு காணமுடியாது போனால் நாட்டில் மீண்டும் பெரும் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி நேரிடும்.

இதேவேளை கொழும்புஉட்பட மேல் மாகாணத்தைப் போன்று, நாட்டின் வடக்கு. தென்பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் குறிப்பாக 1948 ற்குப் பின் அரசாங்கம் முதல் முறையாக இவ்வருடமே பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-9)

# ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு பணிப்பாளர் மீண்டும் கைதாகலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின்பணிப்பாளர்நிஹால் கருணாரட்ணாவை மீண்டும் விசாரணைக்குட் படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹட்டகான பகுதியில் பாதாள உலக கோஷ்டி உறுப்பினர் ஒருவரின்வீட்டிலிருந்து கைப்பற்றப் பட்ட வாகன இலக்கத்தகடுகள் ஜனாதிபதிபாதுகாப்பு பிரிவுக்கு வழங்கப்பட்டதென மோட்டார் வாகன போக்கு ரத்து ஆணையாளர் அலுவலகம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்தமை தொடர்பாகவே இவர் மீண்டும் கைதாகலாம் எனதெரிய வருகிறது.

கடந்தவருடம் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது வாக்குப்பெட்டிகளை களவாடியமை சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்காவை தாக்க முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் இவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன்இவர் வெளிநாடுகளுக்குசெல்வதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

# புத்தக வடிவமைப்பில் மீனவருக்கு விநியோகம்

(மந்திகை)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நகல் பிரதிகள் புத்தக வடிவில் வடிவமைக்கப்பட்டு வடமராட்சி கடல்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் கடல் தொழில் சங்கங்களுக்கு விநியோகிக்கப் படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கடல் தொழிலுக்கான தடை நீக்கம் தொடர்பாகவும் அறிந்து செயற்பட வசதியாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக சமாசத்தின் செயலாளர் க. சூரியகுமாரன் தெரிவித்தார். (உ-23)

# பிரதேச செயலகங்கள் இயங்கும்

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி மற்றும் மருதங்கேணி பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதைத் தொடர்ந்து இரு பிரதேச செயலகங்களும்எதிர் வரும் 15 ஆம் திகதி முதல் மீளவும் செயற்படவுள்ளன. (க-77)

## பாராளுமன்ற உறுப்பினர்களின்

# வாகனப் பயன்பாடு விரைவில் முக்கிய முடிவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாவனைக்கென இறக்குமதி செய்யப்படும் சொகுசு வாகனங்கள் தொடர்பாக விரைவில் முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இவ்வளவு காலமும் உறுப்பினர்களின் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பி. எம். டபிள்யூ கார்கள், பென்ஸ் கார்கள், இன்ரடலர்கள் என்பன இறக்குமதி செய்யப்படமாட்டாது என்றும்,

ஆனால், இவற்றுக்கு பதிலாக இந்தியாவில் இருந்து இங்கு வாகனங்கள்இறக்குமதி செய்யப்படும் என்றும், உள்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு பிரதமர்ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகமேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-08)

# பழைய இரும்பிற்கு யாழில் பெரும் கிராக்கி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலிருந்து பழைய இரும்புப் பொருட்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதனால் யாழ்ப்பாணப்பகுதியில் பழைய இரும்புக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து குடாநாட்டுக்குள் பொருட்களை ஏற்றி வரும் லொறிகள் அப் பொருட்களை யாழ்ப்பாணத்தில் இறக்கி விட்டு மீண்டும் தென்பகுதிக்குச் செல்லும் போது பழைய இரும்புகளை ஏற்றிச் செல்கின்றமையே பழைய இரும்பிற்கு கிராக்கி ஏற்படுவதற்குகாரணமாகும். (க-232)

# வங்கி அதிகாரிகள் இடமாற்றம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி மக்கள் வங்கியின் முகாமையாளராக இது வரை காலமும் கடமையாற்றிய துரைசிங்கம் ரகு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளைக்கு இடமாற்றப் பட்டுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணம் பிரதான வீதி கிளையில் முகாமையாளராக கடமையாற்றிய க. பாலச்சந்திரன் சாவகச்சேரிக் கிளைக்கு முகாமையாளராகப் பணியாற்றவுள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளையில் முகாமையாளராகப் பணியாற்றிய எஸ். பத்மநாதன் காங்கேசன் துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி கிளையின் முகாமையாளராக இருந்த எழுத்தாளரான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் யாழ். பல்கலைக்கழக கிளைக்கு முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க-77)

# கண்டாவளை மண் வருகை

(தென்மராட்சி)

கண்டாவளையில் இருந்து பாளியாற்று மணல் குடாநாட்டுக்குஇப்போதுகொண்டு வரப்படுகின்றது.

ஒருலொறி மணலின் விலை 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா வரை கொடிகாமம் பகுதியில் விற்பனை செய்யப் பட்டுவருவதாகத் தெரியவருகிறது. (க-77)

# பிரிட்டிஷ் பிரமுகர் மட்டுநகர் விஜயம்

## உயர்மட்டப் பேச்சும் இடம்பெறும்

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பாளரான ரொனி லேண்ட் மார்க் ஸ்டோன் இம்மாதம் 22ஆம் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன்கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் மற்றும்அதிகாரிகள் விஜயம் மேற்கொள்வதுடன் அங்குள்ள நிலைமைகளை கண்டறிந்து அரச அதிபர், மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கைஇடம்பெற்றபின்னர் இவரது இலங்கைக்கான மேற்படி விஜயம் வழமையானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி கொழும்பு வரும் இவர் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா, அரசியலமைப்பு விவகார அமைச்சர்பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் உட்பட பலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார். (க-03)

## சிந்தனைக்கு விருந்து

### 'போர்' எனக் குளறும் கொடியோர்

கால்இழந் தோர்கள், கைஇழந் தோர்கள்
கதியின்றி அகதிகள் ஆனோர்
பால்மணம் மாறாப் பிள்ளைகள் தவிக்கப்
பரகதி அடைந்தவர், தமது
கால்வழி வந்தோர் காப்பர்என் றிருந்து
கடைசியில் அவர்களை இழந்தோர்
கோலங்கள் கண்டும் 'போர்' எனக் குளறும்
கொடியரிற் கொடியவர் யாரே;

- பழையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 பெட்டியுடன் ரயில் தடம்புரண்டது

# 10 பேர் பலி; 100 பேர் படுகாயம்

## புதுடில்லியில் சம்பவம்

(புதுடில்லி)
இந்தியாவில் சஞ்சீவி எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரண்டதில் 10 பேர் பலி;100 ற்கும் அதிகமானோர்படு காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை பாட்னாவில் இருந்து புதுடில்லிக்கு பயணத்தை மேற் கொண்ட ரயிலே விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி ரயிலின் 14 பெட்டிகளும் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது. ரயில் தடம்புரள்வதற்கு ரயில் பாதையின் சீரின்மையே காரணம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம் பெற்றதை அடுத்து ரயில்வே அமைச்சர் நிதிஸ் குமாரன் மற்றும் ஐ. ஏ. எம். எஸ் ராஷா அடங்கிய விசேட குழு சம்பவஇடத்திற்கு சென்று இறந்தவர்களுக்குஅஞ்சலி செலுத்தியதோடு அவர்களது குடும்பங்களுக்கு அரச நஷ்ட ஈடு பெற்றுத்தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நேற்று நண்பகல் ரயில் பாதை புனரமைக்கப்பட்டு மீண்டும் சேவை இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (க-07)

## இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீன தாக்குதலுக்கு பெண்கள் முண்டியடிப்பு

(இஸ்ரேல்)
இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்கள் முடிவடையப் போவதில்லை. இதற்கென பலஸ்தீன இளம் பெண்கள் எந்தவேளையிலும் தயாராக உள்ளனர் என்று கமாஸ்இயக்கத் தலைவர் ஷேக்அக்மத் யஸீர் தெரிவித்துள்ளார்.

குவைத்பத்திரிகைஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர்இதனைத்தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; இஸ்ரேலிய படைகளை கொன்று குவிக்க பலஸ்தீன இளைஞர்களைவிட இளம் பெண்களே துடிக்கிறார்கள்.

எந்தவேளையிலும் தற்கொலை குண்டுதாரிகளாக செல்வதற்கு தயார் நிலையில் நிற்கிறார்கள் இதனால் இஸ்ரேல் மீதான தாக்குதல் தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்று தெரிவித்தார்.

மேலும், இஸ்ரேலியரின்எந்தக் கட்டுப்பாடுகளுக்கும் அடிபணியக் கூடாது என்று வலியுறுத்திய ஷேக் அக்மத் இஸ்ரேல் மீது பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் மேற் கொள்ளும் தாக்குதல்களை வரவேற்பதாகவும் தலைவன் என்ற ரீதியில் அவருக்கு நான் பெருமதிப்பளிக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார். (க-7)

## பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதுவர் நாடு திரும்பவுள்ளார்

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானுக்கான அமெரிக்கத்தூதுவர் பென்டிஸ் ஸேம்பலின் தனது பாதுகாப்புக் கருதி நாடு திரும்பவுள்ளார்.

பாகிஸ்தானில்வெளிநாட்டவரைக் குறிவைத்து குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்று வருவதால் பென்டிஸ்ஸேம்பலின் அமெரிக்காதிரும்பவுள்ளார்.

கடந்த வாரம் பாகிஸ்தானில் இடம் பெற்ற குண்டு வெடிப்பொன்றில் 17 பிரான்சியர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா தன் தூதுவருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளைபாகிஸ்தானில் இருந்த வெளிநாட்டவர்கள் பாதுகாப்புக் கருதிவெளியேறுவது இது இரண்டாவது தடவை என்று தெரிவிக்கப்படுகிறது. (க-07)

## வன்னியில்விடுதலை புலிகள் எம்மை கௌரவமாக வரவேற்று மகிழ்ந்தனர்

### புளத்சிங்களபிரதேசசபை உறுப்பினர்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
வன்னிப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் பிரவேசித்த எம்மை விடுதலைப் புலிகள் மிகக் கண்ணியமாக வரவேற்றனர்.

இவ்வாறு சமாதானப்பேரணியுடன் கலந்துகொண்டு வந்த பொதுஜன ஐக்கியமுன்ணியின் புளத் சிங்கள பிரதேசசபை உறுப்பினர் அஜித சமரசேகரதெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சிப் பகுதியில் தவறுதலாக புலிகளின் பயிற்சி முகாமுக்குள் நுழைந்தபோது அவர்கள் எம்மை நல்லமுறையில் வழிநடாத்தினார்கள். தமிழ் மக்களையே முகாமுக்குள் நுழைய விடாத புலிகள் முகாமில் தவறுதலாகநுழைந்தபோது கௌரவமாக மதித்தனர்.

ஐக்கியதேசிய கட்சி ஆட்சியின்போதே அமைச்சர் ஒருவர் மக்களோடு மக்களாக இணைந்திருப்பதையும் கண்டு கொண்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் நாமும் எம்முடன் புலிகளும் மனம்விட்டுப் பேசுமளவிற்கு ஆர்வமாக உள்ள போதும் எம்மிருவரிடையேயும் மொழி ஒரு தடைக்கல்லாக இருந்தது எனவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். (க-8)

## பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த2வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த வெள்ளவத்தை வாசியை மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதிகே.விஸ்வநாதன் 20ஆயிரம் ரூபா பிணையில்செல்லஅனுமதிவழங்கியுள்ளார்,

வெள்ளவத்தை கரக்கும்பான் வீதியைச்சேர்ந்த சுப்பிரமணியம் கோவிந்தராஜ் என்ற இளைஞருக்கே பிணையில்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறுவகைத் துப்பாக்கிகளை கையாள்வது பற்றியும் கிரனேட்குண்டு வெடிக்கச்செய்வது பற்றியும் பயிற்சிபெற்றதாக பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவரதுசார்பில் ஆஜரான சட்டத்தரணி பிரஸ்தாப இளைஞர் இரு வருடங்கள் தடுப்புக்காவலில் இருப்பதால் பிணையில் விடுதலைசெய்ய வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தேஇவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (க-9)

## மேற்கு பாகிஸ்தானில் அல்கைதாக்கள் தஞ்சம்

### புலனாய்வுத்துறைஅறிவிப்பு

(இஸ்லாமாபாத்)
அமெரிக்காவால்கைது செய்யப்படாத எஞ்சிய அல்கைதாக்கள் தற்பொழுது மேற்கு பாகிஸ்தானில் மறைந்திருப்பதாக அமெரிக்க புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைபாகிஸ்தானில் மறைந்துள்ள அல்கைதாக்கள் மீது அமெரிக்கா தாக்குதல்களை நடத்த பாகிஸ்தான் இடமளிக்க மறுக்கிறது.

இதனை அடுத்து அல்கைதாக்கள் மீது அமெரிக்கா நடத்தவுள்ள நாக்குதலுக்கு பாகிஸ்தான் அனுமதி மறுத்தால் அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள இராஜதந்திர மற்றும், பொருளாதார உறவுகள் பாதிப்படையும் என ஊகங்கள் எழுந்துள்ளன. (க-07)

## 30 பேருடன் படகுவிபத்து 19 சடலங்கள் மீட்பு

(மணிலா)
சுமார் 30 பயணிகளை ஏற்றிச் சென்ற பிலிப்பைனஸ் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் படகில் சென்ற பெரும்பாலானோர் பலியாகியிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் 19 பேரின் சடலங்கள் இது வரை மீட்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் பற்றிய தகவல்கள் இன்னமும் தெரியவரவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸிலிருந்து மின்டானோ தீவுக்கு சென்று கொண்டிருந்த வேளையிலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

படகு விபத்துக்குள்ளானமைக்கு திடீரென திசைமாறி வீசிய சுடுங்காற்றே காரணம் என தெரிவித்தபோதிலும் விசாரணைகள் தீவிரமாக இடம் பெற்றுவருகிறது. (க-07)

## விவசாய உள்ளீடுகள் இன்றி நயினை விவசாயிகள்கவலை

### பொது அமைப்புக்கள் பாராமுகம்

(தென்மராட்சி)
நயினாதீவில் இருக்கின்ற 500க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் இல்லாமையினால் விவசாய முயற்சிகளில் ஈடுபடாமல் இருப்பதாகத் தெரியவருகிறது.

இதனால் இந்த விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நிலத்தில் எத்தகைய பயிர்களையும் உற்பத்திசெய்ய முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

இங்குள்ள விவசாயிகளின் நிலை குறித்து விவசாயத் திணைக்களமோ அல்லதுஅரச சார்பற்ற நிறுவனங்களோ எந்தவிதமான அக்கறையும் எடுக்காமல் இருப்பது பற்றியும் விவசாயிகள் தரப்பில் குறை கூறப்பட்டுள்ளது.

நயினாதீவு விவசாயிகள் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கின்ற போதிலும்கூடவிவசாயத்துக்கான விதைகள் உரவகைகள், கிருமிநாசினிகள் மற்றும் நிலங்களை உழுவதற்கும், நீர்ப்பாசனத்துக்கும் மண்ணெண்ணெய் போன்ற உள்ளீடுகள் இல்லாத நிலையில் விவசாயத்தில் ஈடுபட முடியவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர். (க-77)

## காஷ்மீரில் மோதல் 9 பேர் பலி

(ஸ்ரீநகர்)
ஜம்மு காஷ்மீரில் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் 9 தீவிரவாத முஸ்லிம் கெரில்லாக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுசம்பவத்தைத்தொடர்ந்து அப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டு சத்தங்கள் கேட்ட வண்ணமுள்ளன. (க-7)

## கியூபாமீதான அமெரிக்க குற்றச் சாட்டை காஸ்ரோ மறுத்துள்ளார்

(ஹவானா)
கியூபா மீதான அமெரிக்காவின் குற்றச்சாட்டை கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ரோ வன்மையாக கண்டித்துள்ளார்.

கியூபா, இரசாயன, ஆயுதங்களை தயாரித்து வருவதாகவும், அது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இது முற்றிலும் பொய்யான குற்றச் சாட்டு என்று கியூபாவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கியூபா கடந்த 16 வருடங்களாக சுமார்ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை அணு ஆயுத ஆராய்ச்சிக்காக செலவழித்துள்ளதாக அமெரிக்க அணுவாயுத கட்டுப்பாட்டு செயலாளர் யோன் போல்டன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## முதலாவது ஏவுகணை பரிசீலனை வெற்றி

(தைபி)
விமானங்களைத் தாக்கக் கூடிய ஏவுகணைகளை தாய்வான் தயாரித்து கடந்தவெள்ளிக்கிழமை அதனை பரிசீலித்துள்ளது

நிலத்தில் இருந்த படியே ஆகாயத்தில் பறக்கும் விமானங்களை தாக்கக் கூடிய ஏவுகணைகளை செலுத்தி அது வெற்றியளித்துள்ளது என தாய்வானின் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதுபோன்ற ஏவுகணைகளை தயாரித்து செயற்படவைத்தமை தாய்வானுக்கு இதுவே முதற்தடவை எனவும் தாய்வான் அரசு தெரிவித்துள்ளது. (க-07)

## காலில் மிதிபட்ட பொருள் வெடித்துச் சிதறியது வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் காலில் மிதிபட்ட ஒரு பொருளினை காலால் தட்டிய போது, அது வெடித்ததில் படுகாயத்திற்கு உள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலையை சொந்த இடமாகக் கொண்ட செ.செல்லத்துரை (வயது-45) என்பவர் ஸ்ரீ பார்வதி பாடசாலைக்கு அண்மையில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை வெடிபொருள் வெடித்ததில் முழங்காலுடன் தனது ஒரு காலை இழந்துள்ளார்.

இவரது மற்றைய காலும் இச்சம்பவத்தின்போதுபாதிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வயோதிபர் தற்போது இடம் பெயர்ந்து கொக்குவில் அகதி முகாமில் வசிப்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங் கூறான் அல்ல செய்யினும் ஒருவன்
புறங் கூறான் என்றல்இனிது.

குறள்

# வலம்புரி

## அரசு மீறினால் ...

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீறினால் சர்வதேச நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய முடியுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்துள்ளார். பிரதமரின் இந்த அறிவிப்போடு அவரின் மௌனம் கலைந்து விட்டது.

விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறினால் அவர்கள் மீது சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாமென அறிவித்த பிரதமர் ரணில் அரசு மீறினால் அது குறித்து விடுதலைப் புலிகளும் முறையீடு செய்யலாமெனக் கூறத்தவறியமை அவரின் நடு நிலையில் ஏற்பட்டுள்ள சரிவை சுட்டி நிற்கிறது.

ஒரு நாட்டின் பிரதமர் எல்லா இனங்களும் சமம் என கருத வேண்டிய பொறுப்புடையவர் ஆனால் பிரதமர் ரணில் இது காலமும் மௌனமாக இருந்து விட்டு திடீரென மூன்று மாதங்களுக்குள் சமாதான முயற்சி பற்றி முக்கிய முடிவுகள் தெரியுமென்றும், விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை மீறினால் அது குறித்து சர்வதேச நீதிமன்றில் முறையீடு செய்ய முடியுமெனவும் கூறியுள்ளார்.

பிரதமரின் இந்த அறிவிப்பு சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்த மக்கள் மத்தியில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினை இவ்வளவு காலமாக நீண்டு செல்வதற்கு பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் பொறுப்பற்ற முறையில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதே காரணமாகும்.

அவ்வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இது விடயதில் புத்திசாலித்தனமாக செயற்பட்டு வருகிறார் என அரசியல் ஆய்வாளர்கள் கருதியிருந்த வேளையில் அவரும் ஏனைய சிங்களத் தலைவர்களுக்கு சளைத்தவர் அல்ல என்பதை நிரூபிப்பது போல் வார்த்தைகளைக் கொட்டத் தொடங்கியுள்ளார். இது சமாதான முயற்சிக்குரிய வழிவகையன்று எனவே பிரதமர் ரணில் ஏனைய தலைவர்கள் போலன்றி நாகாத்து சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

# அழகான கலைகளின் மத்தியில் வளர்கின்றவன் உயர்ந்த மனோபாவங்களைப் பெறுகிறான்

நேர்மையான மனம் படைத்தவருக்குச் சட்டம் தான் கடவுள். காணப்படும் உலகம் வேறு, அறியப்படும் உலகம் வேறு, படிப்புகள் அனைத்திலும் அதி உன்னதமான படிப்பு மனிதன் எப்படியிருக்க வேண்டும், எதைத் தேட வேண்டும் என்ற படிப்புத் தான். சற்காமல் இருப்பதைவிடப் பிறக்காமலிருப்பதே நல்லது.ஏனெனில், அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர். ஒளிவிளக்குகள் வைத்திருப்போர் மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக! எது உண்மையான ஆனந்தம் அல்லது மேலான சுகம் என்று நிர்ணயிப்பதற்கு அறிவு, அனுபவம், இயற்கை உணர்வு ஆகிய மூன்றும் தேவை. பணியாளர்களிடமும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

### பண்பு எல்லோருக்கும் பொதுவானது

அநீதியை வெறுத்து நீதிக்கு உள்ளுர மதிப்புக் கொடுக்கும் மனிதனை, அவன் வெகு சுலபமாக எந்த வகுப்பினருக்கு அநீதி இழைக்க முடியுமோ அந்த வகுப்பினரிடம் அவர் நடந்து கொள்ளும் முறைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பண்பு என்னும் மங்கை எல்லோருக்கும் பொதுவானவர். அவளைக் கௌரவப் படுத்தும் அளவையும், அகௌரவப் படுத்தும் அளவையும் பொறுத்துக் கூடவோ குறைவாகவோ அவளை மனிதன் அடைகின்றான். படிப் பற்றவர்களையோ உண்மையை அறிய முடியாதவர்களையோ வாழ்க்கை முழுவதையும் படிப்பதிலே கழிக்க விரும்புபவரையோ ஆளும் அதிகாரிகளாக ஆக்கக் கூடாது.

எந்த நாட்டில் ஆள்வோர் குறைவாக ஆள வேண்டும் என இச்சைப் படுகிறார்களோ அங்கு திறமையும் அமைதியுமசெழித் தோங்கும. எந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிகமாக ஆள வேண்டும் என்ற இச்சை வெறி ஏற்படுகிறதோ அங்கு ஒரு குழப்பந் தான் உண்டாகும். உள்நாட்டு யுத்தமோ வெளிநாட்டு யுத்தமோ எதுவாயிருந்தாலும் அதிலிருந்து தப்ப வேண்டும் ஒருவரோடொருவர் கொள்ளும் சமாதானமும் நல்லெண்ணமுமே சிறந்தன. சமாதானத்திற்காகச் சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காகச் சமாதானத்தைப் பிறப்பிக்கும் மனிதன் புத்திசாலியல்ல. எந்தக் காரணத்துக்காக எதிரிகளாக இருக்கிறார்களோ அந்தக் காரணம் இருக்கும் வரைதான் அவர்களை எதிரிகளாகப் பாவிக்க வேண்டும். அதற்கு மேல் சண்டையை தொடர்ந்து நடத்தக் கூடாது.

வறுமையோசெல்வமோ இல்லாதசமுதாயத்திற்குக்கண்ணியமான பண்புகள் இருக்கும், அதில் மமதைக்கோ அநீதிக்கோ பொறாமை போட்டிகளுக்கோ இடமில்லை. அளவுக்கு மீறிய செல்வமோ அளவுக்கு மீறிய வறுமையோ மனிதர்களைஒழுக்கம் கெட்டவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் செய்து விடுகின்றது. நாம் இரண்டு எதிரிகளோடு போரிடவேண்டும். செல்வம்வறுமை என்பனதாம் அவை இரண்டும் அவற்றுள் ஒன்று தன் ஊதாரித்தனத்தால் மனிதனின் ஆத்மாவைக் கெடுக்கிறது. இன்னொன்றோ துன்பத்தின் வழியாக மிகவும் வெட்கம்கெட்ட தனத்தை நோக்கி அவனை விரட்டித் தள்ளுகிறது. ஒரு நாட்டில் பிச்சைக்காரர்களிருந்தால், அங்கேதிருடர்களும் கோயிலில் கொள்ளையடிப்பவர்களும் இருப்பார்கள்.

### அறிவும் சத்தியமும் உறவு

கவிஞர்கள் எவ்வாறு தங்கள் சொந்தக் கவிதைகள் மீது மோகம் உள்ளவர்களாயிருக்கிறார்களோ, பெற்றோர்கள் எவ்வாறு தங்கள் சொந்தக் குழந்தைகளிடம் பாசம் வைக்கிறார்களோ, அவ்வாறே சுயமாகப் பணம் சம்பாதிப்பவர்கள் அந்தப்பணத்தின் மீது அதிகமான பாசம் உள்ளவர்களாய் இருக்கின்றார்கள். பிறக்கும்குழந்தைகள் அனைத்தும் ராஜ்யத்தின் பொதுவுடமைச் சொத்துக்களாகிவிட்டால் குழந்தைகள் பிறப்பதில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஆனந்தமும், அவை மரிப்பதில் ஒரே மாதிரியான துக்கமும்உண்டாகிறது. அறிவும்,சத்தியமும் நெருங்கிய உறவுடையன. உண்மையான அறிவின் காதலனாக இருந்தால் அவன் தன் அதி இளமைப்பருவத்திலிருந்தே சகலவற்றிலும் மெய்மையை விரும்புபவராய்இருக்க வேண்டும்.

மனிதனிடம் அறிவு உறங்கினால் மிருகஇச்சைகள் கண் விழித்தெழுந்து குதியாட்டம் போடுகின்றன. எவரொருவரின் ஆசைகள் ஒவ்வொரு வடிவத்திலுள்ள அறிவை நோக்கியே கவரப்படுகின்றனவோ அவர் தம் மனதுக்கு ஏற்படக்கூடிய இன்பங்களிலேலயித்திருப்பாரே தவிரதேகத்துக்கு ஏற்படக் கூடிய இன்பங்களை உணரமாட்டார். இளமை எனும் பக்குவமான வயதில் தான் எந்த விதக் குணப்பண்பும் உருப்பெறுகிறது.எந்தவித அபிப்பிராயமும் ஆழமாக வேரூன்றுகிறது.

அறிவதற்கு ஒன்றுமில்லை. நாம் அறியாததை அறிந்து கொள்ள அலைவதில் எந்த வித உபயோகமுமில்லை என்று அசமந்தப் பாவனைகளில் மூழ்கிக் கிடப்பது இந்தக் கொள்கைக்கு எதிராகத் தன் சக்தியையெல்லாம் திரட்டி, சொல்லாலும், செயலாலும் போரிடத் தயாராயிருக்கிறது. என் அறிவின் பிரதிபலிப்பில் அது எனக்குச் சிறந்ததெனத் தோன்றினாலும், அந்த அறிவின்படியே தியாகக் கொழுந்து விட்டு எரிகிறது.கட்டுப்பாடானசரியான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும், இல்லையென்றால் நேர்மாறான விளைவுகள் தான் உண்டாகும்.

### தேகாரோக்கியம்

ஆடம்பர உல்லாச வாழ்க்கையினால் அடிக்கடி வைத்தியர்களின் உதவி தேவைப்படும்.உங்கள் தேகாரோக்கியம் நல்ல நிலையில் இருக்க வேண்டுமானால் உங்களது உணவு விஷயங்களில்ருசியைப் பார்க்கக் கூடாது. ஏககாலத்தில் பல வகையான சுருதிகளுடன் சங்கீதம் பாடினால் அது அதிக சப்தத்துடனும், அபஸ்வரங்களுடனும் எப்படி நாராசமாய் இருக்கிறதோ அது போலப் பலரகமான உணவுகளை உடலுக்குள் அள்ளி அடைப்பதால் அது நாசகரமாய் இருப்பதோடு தொல்லையாகவும் இருக்கும். எளிமையான பாடலின்இன்னிசை லயத்தில் ஆத்மா சுருதி சேர்த்து ஸத்வகுணம் பெறுவது போல எளிமையான உணவுகளினால் தேகாரோக்கியத்துக்குச் சத்துக்கிடைக்கிறது.எந்தப் பொருளிலும் எந்த ஆத்மாவிலும் நல்லது கெட்டதுகலந்தேஇருக்கிறது.

ஒரே மனிதன் பலவிதமான கலைத்தொழில்களில் வெற்றி பெற முடியாது. மனித ஜாதியில் ஒரேமாதிரியான மனப்போக்குஅல்லது திறமையுள்ள இருவரைக் கண்டுபிடிப்பது மிகக் கடினம். ஞாபக சக்தி, விரைவில் கிரகிக்கும் திறமை உயர்ந்த மனோபலம், சரள சுபாவம்,நேர்மை, மெய்மை, தைரியம்,நிதானம் இத்தகைய குணங்கள் மீது விருப்பமுள்ள ஒருவன் ஒருதொழிலில்ஈடுபட்டால் அந்தத் தொழிலில் ஒட்டையிராது. மனிதனிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாதவீரமோ இருந்தால் அவன் கோழையாகவோ முரடனாகவோ ஆகிவிடுவான். ஒவ்வொரு மனிதனும் துணிச்சல் உள்ளனவாய் இருக்க வேண்டும். ஆனால் அவன் கண்ணியமானவனாயுமிருக்க வேண்டும். அளவு மீறிய தற் செருக்குத் தான் உண்மையில் அவர்களின் தவறான செயல்கள் அனைத்திற்கும் மூலகாரணமாயிருக்கிறது. சுய பற்றுதல் நீங்க வேண்டும்.

### பலவீனயான சுபாவம்

அறிவு, வீரம், நிதானம், நேர்மை ஆகியவை நான்கும் நல்ல ஒழுக்கங்கள், நல்லவர்கள் வெகு சிலரே, தீயவர்களும் வெகு சிலரே, பெரும்பாலானவர் இவை இரண்டுக்கும் மத்தியில் இருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு கெட்டவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள், பிறரை எவ்வளவு காலத்துக்குத் துன்பப் படுத்துகிறார்களோ அவ்வளவு காலத்திற்கு அந்த மனிதர்கள் துன்பப்படுகிறார்கள். நல்ல தன்மை என்பது ஆத்மாவின் நல்லமைப்பும் ஆரோக்கியமும் அழகுமாகும், தீமை என்பதோ அதன் நோயும் கோர அமைப்பும் பலஹீனமும் ஆகும். பலவீனமான சுபாவங்களும் மிகப் பெரிய நன்மை செய்யவும் சக்தியில்லை, மிகப்பெரிய தீமை செய்யவும் சக்தியில்லை.

விபரீதமான சூழ்நிலைகளில் தாழ்ந்த சுபாவங்களை விட மேலான நுட்ப சுபாவங்

(4ம் பக்கம் பார்க்க)

## பிளேட்டோ

எப்போதும் வழி நடக்கும் சுபாவமுள்ளவர்களில் நானும் ஒருவன், ஒவ்வொரு மனிதனின் அறிவிலும்நான்கு நிலைகள் உள்ளன. முதல் நிலை யூகம், இரண்டாவது நிலை நம்பிக்கை, மூன்றாவது நிலை மெய்யறிவான பகுத்தறிவு நான்காவது ஒருபொருளின் மெய்த்தன்மையை அறிய வேண்டுமானால் இத்தனை நிலைகளையும் நம் அறிவு தாண்டிச் செல்லவேண்டும்.

முட்டாளின் ஸ்துதி ஆபத்து நிறைந்தது. ஒருவன் விரும்புவதற்கு நேர் மாறாக முடியக் கூடியது, அறியாமையிலெல்லாம் பெரிய அறியாமை ஒன்றுண்டு. தெரியாதவர் அது தனக்குத் தெரிந்திருப்பதாக நினைத்து கொள்வதுதான் அது. இதுதான் அறிவின் தவறுகள் அனைத்திற்கும் மூல காரணம்.

### உண்மையான காதல்

காதல் ஒரு தீவிரமான மன நோய்! காதலானது மனிதர்களைத் தங்கள் காதலிகளுக்காகச் சாகவும் துணியச் செய்கிறது, காதல் ஒன்றுதான் அவ்வாறு ஆக்குகின்றது. ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும், எது வெறியூட்டக் கூடியதோ, அது கட்டுக்கடங்காமல் மிதமிஞ்சிப் போவதோ அதற்கு உண்மையான காதலில் இடமில்லை. உண்மையான காதல் நிலைத்திருக்க வேண்டுமானால் சிற்றின்ப ஈடுபாடு தலைக்காட்டக் கூடாது. காதலர்கள் ஒருவரையொருவர் உயிருக்குயிராய்க் காதலிக்கிறவர்களாயிருந்தால் உடலின்பத்தில் அக்கறை கொள்ளமாட்டார்கள். மனிதவாழ்வின் அடிப்படை, மூன்று தேவைகள் மீதும், மூன்றுவித ஆசைகள் மீதும் அமைந்துள்ளது. சாப்பிடுவது, குடிப்பது, ஆண் பெண் சரீர இச்சை. முதலிரண்டு தேவைகளும் பிறப்பிலிருந்தே துவங்கி விடுகின்றன. மூன்றாவதான மாபெரும்தேவையோ சரீர இச்சையின் வடிவில் மனிதர்களைப் பைத்தியம் ஆக்குகின்ற அளவிற்கு மூர்க்கமான

## தினசரி தியானம்

### உறக்கம்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

-திருக்குறள்

உடல் வாழ்வு பொருத்தமற்றது என்பதை உறக்கம் ஓயாது விளக்கி வருகிற தெனினும் இறைவா, நான் அதை அறியாதிருப்பது என்னே!

உலகப்பற்றுடையார்க்கு நல்ல உறக்கம் கிடையாது. கவலையுடன் இடையிடையே அவர் விழித்தெழுந்திருப்பார். படுத்தமாத்திரத்தில் பிரபஞ்சமறதி பற்றற்றார்க்கே வருகிறது. நல்ல உறக்கம் மனிதனுக்கு நலமனைத்தையும் வழங்குகிறது. உடல் புதுப்பிக்கப்படுகிறது. உள்ளம் தெளிவடைகிறது. உறக்கத்தில் மெய்மறந்து மனிதன் கடவுள் சந்நிதியிலிருக்கிறான். உறக்கத்தை அறிபவன் கடவுளைச் சார்ந்திருக்க அறிபவன் ஆகிறான்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரியின் அறிக்கைக்கு தமிழ்ச் செல்வன் அதிருப்தி

(நமது நிருபர்)

தமிழகத் தலைவர்களை தாக்கி அறிக்கை விடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும், யாழ் மாவட்ட எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழர் கூட்டமைப்புச் செயலாளர் இரா.சம்பந்தனிடம் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூட்டமைப்பு பிரதிநிதிகளில் ஒருவரான இரா. சம்பந்தனுடன் தனித்து சுமார் 15நிமிடங்கள் வரை இது தொடர்பாக கலந்துரையாடியதாகவும் தெரியவந்துள்ளது. (ம)


### படையினரை...

து.வைத்திலிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள இந்த உயர்மட்டக்குழு குடாநாட்டில இராணுவம் தங்கியுள்ள பாடசாலைகளுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)



அண்மையில் அழிந்த நிலையில் உள்ள தென்னை அபிவிருத்திச் சபையின் வண்ணாங்கேணி, பனை தென்னந்தோட்டத்தினை திரு.லிங்கோ பெர்னாந்தோ, தென்னை அபிவிருத்திச்சபைத் தலைவர் பார்வையிடுவதனையும் அருகில் திரு சி.சிவச்சந்திரன், திரு ஜெ.சத்தியேந்திரன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் நிற்பதனையும் காணலாம்.



அண்மையில் நடைபெற்ற வேலணைப்பிரதேச செயலகத்தினால் விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வின் இடைவேளையின் போது ''ஜலன்ட் சோட்டோ கராட்டி டு அசோசியனின்'' ஜெகன் ஆசிரியரின் மாணவர்கள் சிறிய கராத்தே நுட்ப ''காட்சிகள்'' வழங்கினார்கள் அதன்போது ஒரு காட்சியினைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் வந்திருந்த கொழும்பு கூடைப்பந்தாட்டக் குழுவின் கொழும்பு மாவட்டப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் அணியுடன் யாழ் மத்தியகல்லூரி அணி தனது ஆடுகளத்தில் நடத்திய சிநேகிதபூர்வ ஆட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## பருத்துறை அணி சாம்பியனானது

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரனையுடன் பிரதேச செயலர் பிரிவுகளுக் இடையில் நடாத்தப்பட்டுவரும் எல்லே சுற்றுப்போட்டி இறுதி ஆட்டத்தில் பருத்துறை பிரதேச செயலர் பிரிவு அணி வெற்றியீட்டியது.

நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இவ் ஆட்டத்தில் யாழ் பிரதேச செயலர் பிரிவு அணியினை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு அணி 2:1 என்ற வீதத்தில் வென்றது. (இ-2)

### புலிகள்...

அசெளகரியங்களை லொறிச் சாரதிகள் அனுபவிப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொருட்களை சோதனை செய்யும் புதிய நடைமுறைப்படி விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் ஒரே இடத்துல் பொருட்களைச் சோதனை செய்து அங்கு லொறிகளுக்கு 'சீல்' வைத்து முகமாலை சோதனைச் சாவடிக்கு லொறிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம)

### 78மில்லியன்...

மன்னார், மடு, துணுக்காய் கல்வி வலயப்பகுதிகள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க வவுனியாப பகுதியில் உள்ள மூன்று பாடாசாலைகளில் இராணுவம் இன்னமும் முகாம் இட்டு இருப்பதால் அதனை அகற்றும் நடவடிக்கைக்காக இன்று பி.பகல் 2மணிக்கு கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் அடங்கிய உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் வவுனியா வடக்கு, தெற்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மடு, துணுக்காய் கல்வி வலயப்பணிப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## சிலிங்கோ அமைப்பின் வீடமைப்புக்கடன் நிறுவனம் 15ல் திறப்பு

சிலிங்கோ அமைப்பின் வீடமைப்புக்கடன் வழங்கும் நிறுவனத்தின் கிளை நாளை மறுதினம் 15ம் திகதி யாழ்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்டிடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிறுவனத்தினை சிலிங்கோ அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தேசமானிய லலித் கொத்தலாவல திறந்து வைப்பார். (ந)

## யாழ்ப்பாணத்தில் மிகவிரைவில் டயலொக்செட் சேவை

(கொழும்பு)

இலங்கையின் முன்னணி செலுலர் தொலைபேசி நிறுவனமான எம்.டி.எஸ் தனது ''டய லொக் செட்'' சேவையினை யாழ்ப்பாணம் முதல் பருத்தித்துறை வரை விஸ்தரிக்கவுள்ளது.

செய்மதித் தொலைபேசியின் அடிப்படையில் அமையவுள்ள இந்த டயலொக் செட் சேவை வெகு விரைவில் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (ம)

### *பத்திரிகையாளர் மாநாடு*

யாழ் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்துக்கு வருகைதந்துள்ள பணிப்பாளர் நாளை யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்துள்ள உ.தொ.நு.நிறுவகத்தில் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தவுள்ளார்.




மில்க்வைற்
25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து ஓர் அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ
527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541


பற்களின் வெண்மைக்கும், பாதுகாப்பிற்கும்
அன்னா பற்பொடி
அன்னா தொழிலகம், இணுவில்


### சமாதானத்தை வலியுறுத்தும்

## குதிரைச் சவாரிப் பெண்கள் 17ம் திகதி யாழ் வந்தடைவர்

(வவுனியா)

கடந்த வாரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சமாதானத்தை வலியுறுத்தி குதிரைச்சவாரி மூலம் பவனி வந்த மூன்று பெண்கள் நேற்று வவுனியா வந்தடைந்துள்ளனர்.

குதிரையில் சவாரி செய்து சமாதான யாத்திரையை மேற்கொண்டு வவுனியா வந்தடைந்துள்ள மூன்று இளம் பெண்களும் மீண்டும் இன்று காலை யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருகைதரும் குதிரைச்சவாரிப் பெண்கள் வரும் வழியில் கிளிநொச்சியில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து, தாங்கள் சேகரித்த பாடசாலை உபகரணங்களையும் நிதியையும் அங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு வைபவரீதியாக வழங்கிய பின் அங்கிருந்து புறப்பட்டு 17ம்திகதி வெள்ளிக்கிழமை யாழ்பாணம் வந்தடையவுள்ளனர் (ம)

## திருமலைக் கடற்படையினர் யுத்த நிறுத்த மீறல்

### கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

(திருகோணமலை)

திருகோணமலையில் கடற்படையினர் மேற்கொள்ளும் யுத்தநிறுத்தமீறல்கள் குறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் திருகோணமலை திருக்கடலூரைச்சேர்ந்த மீனவர்கள் கடலில் தொழில் செய்து கொண்டிருந்த சமயம் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதால் வில்வராஜா ஜெயகாந்தன் என்ற மீனவர் படுகாயம் அடைந்திருந்தார்.

இத்தகைய சம்பவங்கள் குறித்தே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை தமிழ் மீனவர் அபிவிருத்தி நிலைய்ம் தெரிவித்துள்ளது. (இ)

## காரைநகர் கசூர்னா பீச்சில் இளைஞர் கோஷ்டி மோதல்

### மது போதையில் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூர்னா பீச்சில் நேற்று இளைஞர் கோஷ்டியினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் மூன்று இளைஞர்கள் காயமடைந்தனர் பலர் கண்டபடி மூர்க்கத்தனமாக ஆள்மாறி ஆள் தாக்கினர்.

கசூர்னா பீச்சுக்கு அண்மைக் காலமாக உல்லாசப் பிரயாணிகள் படையெடுத்து வருகின்றனர் அங்கு கட்டுமீறி மதுபோதையில் அலையும் இளைஞர்கள் கேலி செய்வது கூத்தடிப்பதென விசமத்தனமாக அட்டகாசங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மது போதையில் நிலைதடுமாறி ஒருவருக்கொருவர் வாய்த்தர்க்கங்களில் ஈடுபடுவதனால் மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இப் பகுதியில் தமிழ் முஸ்லீம் சிங்கள இளைஞர்கள் உல்லாசப் பொழுதைக் கழிப்பதும் மது போதையில் தமது கலாசாரத்தையும் மறந்து ஒரு வரை ஒருவர் தாக்குவதும் வீண் வம்புக்கு பிறரை இழுப்பதும் எல்லை மீறி விட்டதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (இ)

## மானிப்பாய் கோவிற்பற்று

### க. தொ. கூ. சங்கத் தலைவரின் வேண்டுகோள்

மானிப்பாய் கோவிற்பற்றுப் பிரிவின் தற்காலிகப் பதிவாளர் திரு. கு. கணேசதாசன் தன்னுடைய பதிவேடுகள் யாவற்றையும் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் 02.05.2002 தொடக்கம் ஒப்படைத்துவிட்டு கொழும்பு சென்றுள்ளார். அந்தப்பிரிவின் பதிவாளர் பதவி தற்பொழுது வெற்றிடமாக உள்ளது. இந்தப் பிரிவின் மக்கள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியாது அலைந்து திரிகின்றார்கள். மாவட்டப் பதிவாளர் ஒரு தகுதியான பதில் பதிவாளரை உடனடியாக நியமித்து இந்தக் குறையைப்போக்க ஆவன செய்ய வேண்டும் என்று மக்கள் வேண்டிக் கொள்கின்றார்கள்.

எந்த ஒரு பதிவுப் பிரிவிலும் மக்கள் நலன் கருதி பதிவாளர் பதவி ஒரு நாளைக்கேனும் வெற்றிடமாக இருக்கக் கூடாது என்பது நியதி.

**நா. பொன்னம்பலம்**
**தலைவர்,**
**க. தொ. கூ. சங்கம்**

ஆனைக்கோட்டை
மானிப்பாய்

(5091)


லாலா
சோப்
சன்சயின்
சோப்
எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.
லாலா அச்சுவேலி

அன்பார்ந்த மாணவர்களே!
மிக விரைவில் *வலம்புரியில்* எதிர்பாருங்கள்
க.பொ.த (சா) தரப் பாடங்களிற்கான மாதிரி
வினாத்தாள்கள் விடைகளுடன்
(யாழ் நகரின் பிரபல ஆசிரியர்களின் தயாரிப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.